


**14.03.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. தமிழ்நாட்டில் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மகளிருக்கான பல்வேறு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

40 ஆயிரம் அரசு பணியிடங்கள் நிரப்பப்படும்

அரசு அலுவலர்களுக்கு ஈட்டிய விடுப்பு சலுகை நடைமுறைபடுத்தப்படும்

கல்லூரி மாணாக்கருக்கு மடி கணினிகள் வழங்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2. சட்டப்பேரவையிலிருந்து அஇஅதிமுக பா.ஜ.க உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

3. ஹோலி பண்டிகை நாடுமுழுவதும் உற்சாகத்துடன் இன்று கொண்டாடப்படுகிறது.

4. கச்ச தீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் தமிழகத்தில் இருந்து மூன்றாயிரம் பேர் பங்கேற்கின்றனர்.

5. **All England Open badminton** சேம்பியன் பட்ட போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் லக்ஷயா சென் இன்று களமிறங்குகிறார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

************

<u>சட்டப்பேரவை</u>

கல்வி சுகாதாரம் தொழில்துறை ஆகியவற்றில் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் 2025-26ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசிய அவர், தமிழ்நாட்டில் பணியாற்றும் மகளிருக்காக 10 தோழியர் விடுதிகள் ஏற்படுத்தப்படும்,

சென்னை கோவை மதுரையில் மாணவியர் விடுதிகள் அமைக்கப்படும்,

தமிழ்நாட்டில் 10 லட்சம் ரூபாய் வரையிலான அசையா சொத்துக்கள் பெண்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டால் ஒரு சதவிகித பதிவு கட்டணம் குறைக்கப்படும் என்றும் கூறினார்.

10 ஆயிரம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் இந்தாண்டு உருவாக்கப்படும் என்றார்.

மகளிர் உரிமை தொகை வழங்க 13 ஆயிரத்து 607 கோடி ரூபாய் இந்தாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்தில் விடுபட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

வாய்ஸ்

கலைஞர் கனவு இல்ல திட்டத்தின்கீழ் மூவாயிரத்து 500 கோடியில் புதிதாக ஒரு லட்சம் வீடுகள் இந்தாண்டு கட்டப்படும் என்றார்.

ராமநாதபுரம் மாவட்டம் நாவாயில் 21 கோடி ரூபாய் செலவில் புதிய அருங்காட்சியகம் அமைக்கப்படும்,

மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் சென்னையில் ஏற்படுத்தப்படும்,

புதுக்கோட்டை மாவட்டத்தில் 4 லட்சத்து 70 ஆயிரம் பேர் பயனடையும் வகையில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்,

சீரமைக்க இயலா வீடுகளுக்கு மாற்றாக 25 ஆயிரம் வீடுகள் புதிதாக கட்டப்படும் என்றார்.

7 மாவட்டங்களில் 6 ஆயிரத்து 668 கோடி ரூபாய் செலவில் புதிய கூட்டுகுடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்படும்,

திருச்சி மதுரை ஈரோடு கோவை மாவட்டங்களில் நதிக்கரை மேம்பாட்டு திட்டம் 400 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்படும் என்றார்.

சென்னை அருகே புதிய நகரம் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும்,

சென்னை நகரில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2 ஆயிரத்து 423 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்,

நெல்லை மற்றும் கோவை மேற்கு பகுதிகளில் புறவழிசாலை அமைக்கப்படும்.

கைத்தறி துறைக்கு ஆயிரத்து 980 கோடி ரூபாயும்,

மாற்றுத்திறனாளிகள் நலனுக்கு ஆயிரத்து 430 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருவான்மியூர் முதல் உத்தண்டிவரை நான்குவழி உயர்மட்ட சாலைகள் 2 ஆயிரத்து 100 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்றார்.

பழங்குடியின மாணவர்கள் இடைநிற்றலை தடுக்க 14 உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்,

நகர்ப்பகுதிகளில் இயங்கி வரும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு 600 கோடியில் காலை உணவுத்திட்ட விரிவாக்கம் செய்யப்படும்,

அரசு பள்ளிகளில் இந்தாண்டு இரண்டாயிரம் புதிய கணிணி மையங்கள் அமைக்கப்படும்,

2 ஆயிரத்து 676 பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் கட்ட 65 கோடி ரூபாயும்,

கிராம சாலைகள் அமைக்க 2 ஆயிரத்து 200 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படும் என்றார்.

ஊர்க்காவல் படையில் 3ம் பாலினத்தவர் சேர்க்கப்படுவார்கள் என்றும் கூறினார்.

வாய்ஸ்

அடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணாக்கருக்கு மடி கணினிகள் வழங்கப்படும்,

அரசு கல்லூரிகள் மேம்பாட்டிற்காக 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

பள்ளிக்கல்வித்துறைக்கு 46 ஆயிரத்து 767 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு,

கோவை, திருச்சியில் கலைஞர் நூலகம் அமைக்கப்படும்,

குன்னூர், நத்தம், ஆலந்தூர், பெரம்பலூரில் இந்தாண்டு புதிய அரசு கலைக்கல்லூரிகள் ஏற்படுத்தப்படும்,

திருச்சியில் 250 ஏக்கர் பரப்பில் பொறியியல் வார்ப்பக தொழில் பூங்கா அமைக்கப்படும்,

தூத்துக்குடி மாவட்டத்தில் செயற்கை இழை தொழில்நுட்ப ஜவுளி பூங்கா அமைக்கப்படும்,

கடலூர் புதுக்கோட்டையில் புதிய தொழிற்பூங்காக்கள் ஏற்படுத்தப்படும்,

கோவையில் 2 உயர்திறன் மையங்கள் கட்டமைக்கப்படும் என்றும் கூறினார்.

உயர்கல்வி துறைக்கு 8 ஆயிரத்து 494 கோடி ரூபாயும்,

சென்னையில் புதிய அறிவியல் மையம் அமைக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் தமிழர்களுக்கு 10 லட்ச ரூபாய் நிதி உதவி அளிக்கப்படும்.

பள்ளி உடற்கல்வி பாட திட்டத்தில் சதுரங்க விளையாட்டு சேர்க்கப்படும்.

இளைஞர் நலன் துறைக்கு 572 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

தொழில்துறைக்கு 3 ஆயிரத்து 975 கோடி ரூபாயும்,

தொழிலாளர் நலத்துறைக்கு ஆயிரத்து 972 கோடி ரூபாயும்,

நீர்வளத்துறைக்கு 9 ஆயிரத்து 460 கோடி ரூபாயும்,

எரிசக்தி துறைக்கு 27 ஆயிரத்து 168 கோடி ரூபாயும்,

போக்குவரத்திற்கு 12 ஆயிரத்து 964 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தாண்டு டிசம்பருக்குள் பூந்தமல்லி போரூர் இடையே மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

700 டீசல் பேருந்துகளை இயற்கை எரிவாயு பேருந்துகளாக மாற்ற 7 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

மதுரை கடலூரில் புதிய காலணி பூங்காக்கள் அமைக்கப்படும், ராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் உருவாக்கப்படும்,

சென்னை கோவளம் உபரி நீர் வடிநிலத்தில் புதிய நீர்தேக்கம் 350 கோடி ரூபாயில் உருவாக்கப்படும்,

கோவை பல்லடம் சூலூர் ஆகிய இடங்களில் தலா 50 கோடி ரூபாய் செலவில் செமி கண்டெக்டர் தொழிற்சாலைகள் நிறுவப்படும் என்றார்.

காஞ்சிபுரம் புற்றுநோய் மருத்துவமனையை நவீனமயமாக்க 120 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

170 கோடி ரூபாய் செலவில் 700 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் தடுப்பு மையம் அமைக்கப்படும்,

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் உட்பட கட்டுமான தொழிலாளர் அதிகம் உள்ள மாவட்டங்களில் புதிதாக 7 அரசு தொழிற்பயிற்சி மையங்கள் அமைக்கப்படும், என்றார்.

பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு 18 வயதுவரை மாதம் ரூபாய் 2 ஆயிரம் மானியம் வழங்கப்படும்,

சாதிபாகுபாடற்ற சமூக நல்லிணக்கத்தை உருவாக்கும் சிறந்த 10 ஊராட்சிகளுக்கு தலா ஒருகோடி ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

சென்னை விமான நிலையம்முதல் கிளாம்பாக்கம்வரை மெட்ரோ சேவை ஏற்படுத்தப்படும்.

ஆயிரத்து 120 மினிபேருந்துகள் இந்தாண்டு அறிமுகம் செய்யப்படும்,

சிறுபான்மையினர் நலத்துறைக்கு ஆயிரத்து 563 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றார்.

தனுஷ்கோடியில் பறவைகள் சரணாலயம் ஏற்படுத்தப்படும்,

கல்வராயன் மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

அறநிலையத்துறைக்கு 7 ஆயிரத்து 185 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

உதகை ரேஸ் கோர்ஸ் பகுதியில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க 70 கோடி ரூபாய் ஒதுக்கீடு

ஆயிரம் ஆண்டுகள் பழமையான கோவில்களுக்கு புனரமைப்பிற்கு 125 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும் என்றார்.

விண்வெளி சார்ந்த புத்தொழில் பூங்கா உருவாக்க 19 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

100 மருத்துவமனைகளில் தெருநாய் கருத்தடை மையங்கள் அமைக்க 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு,

பழமையான தேவாலயம், பள்ளிவாசல்களை புதுப்பிக்க 10 கோடி ரூபாயும்

மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை 8 ஆயிரம் ரூபாயாக வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருவான்மியூர், உத்தண்டி, பாலவாக்கம் உள்ளிட்ட 6 கடற்கரை பகுதிகளுக்கு நீலக்கொடி சான்றிதழ் வழங்கப்படும்.

மதுரையில், விரைவில் மெட்ரோ பணிகள் தொடங்கப்படும் என்றார்.

தமிழ்நாட்டில் வரும் நிதியாண்டில் 40 ஆயிரம் அரசு பணியிடங்கள் நிரப்பப்படும்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, ஈட்டிய விடுப்பு 15 நாட்கள் வரை சரண்டர் செய்து பணப்பலனை பெற வகை செய்யப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்களுக்கு திருச்சி, தஞ்சை, மதுரை, கோவை, சேலம், திருப்பூர் உள்ளிட்ட மாநகராட்சிகளில் 25 அன்புச்சோலை மையங்கள் அமைக்கப்படும் என்றும் நிதியமைச்சர் கூறினார்.

- வாய்ஸ் 2 -

ஒசூர் நகரத்தை ஒட்டி உலக தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் ஒசூர் அறிவுசார் பெருவழிதடம் ஏற்படுத்தப்படும்.

75 கோடி ரூபாய் செலவில் பெண்களுக்கான புதிய பாதுகாப்பு திட்டம் உருவாக்கப்படும் என்றார்.

வீடு இல்லாத 5 லட்சம் பேருக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படும் என்றும்,

ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில், 5 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்போருக்கு பட்டா வழங்கப்படும் என்றும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

முதல்வரின் முகவரி திட்டத்தில் பெறப்பட்ட மனுக்களில் 88 லட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தமிழகத்தில் வரும் நிதியாண்டில் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் வருவாய் பற்றாக்குறை 41 ஆயிரத்து 634 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வருவாய் பற்றாக்குறை 41 ஆயிரத்து 635 கோடியாக குறையும் என்றும் குறிப்பிட்டார்.

அரசின் வரிவருவாய் 2 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாயாக உயரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

************

<u>வெளிநடப்பு</u>

முன்னதாக அஇஅதிமுக, பிஜேபி உறுப்பினர்கள் சட்டப்பேரவையிலிருந்து இன்று வெளிநடப்பு செய்தனர்.

சட்டப்பேரவைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய எதிர்கட்சி தலைவருமான திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி டாஸ்மாக் நிறுவனத்தில் முறைகேடு நடைபெற்றதாக அமலாக்கத்துறையினர் தெரிவித்துள்ளதாகவும், அதற்கு தார்மீக பொறுப்பேற்று திமுக அரசு பதவி விலக வேண்டும் என்றும் வலியுறுத்தி வெளிநடப்பு செய்ததாக கூறினார்.

பிஜேபி சட்டப்பேரவை குழு தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் பேசுகையில் ரூபாய்க்கான தேசிய குறியீட்டை மாற்றியது உள்ளிட்டவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்ததாக தெரிவித்தார்.

************

<u>முதலமைச்சர்</u>

சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில், மகளிர் நலன் காக்கும் ஏராளமான திட்டங்கள் நிறைந்திருப்பதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விளிம்பு நிலை மக்களை அரவணைக்கும் வகையில், அனைவரையும் உள்ளடக்கிய பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த பட்ஜெட் நவீன தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான முன்முயற்சி என்றார்.

************

<u>எடப்பாடி</u>

தமிழக பட்ஜெட்டில் 100 நாள் வேலை திட்டம், பெட்ரோல், டீசல் விலை குறைப்பு, நெல், கரும்பு போன்றவற்றிற்கான ஆதார விலை குறித்த புதிய அறிவிப்புகளும் எதுவும் இடம்பெறவில்லை என்று எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி குறை கூறியுள்ளார்.

************

<u>தமிழிசை சவுந்தர்ராஜன்</u>

தமிழக மக்களின் நலனை கருத்தில் கொள்ளாமல் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பி.ஜே.பி.யின் டாக்டர் தமிழிசை சவுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்

வேலூர் குடியாத்தத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பெண்களின் பாதுகாப்பிற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் மகளிரின் முன்னேற்றத்திற்கான எந்த திட்டமும் இடம்பெறவில்லை எனவும் குறைகூறினார்.

************

<u>அலுவல் ஆய்வு குழு</u>

தமிழ்நாடு சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 30ம் தேதி வரை நடைபெறும் என்று பேரவைத்தலைவர் திரு.அப்பாவு அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில், இம்முடிவு எட்டப்பட்டது.

வேளாண் நிதி நிலை அறிக்கை நாளை தாக்கல் செய்யப்படுகிறது.

வரும் 17ம் தேதி முதல் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் தொடங்குகிறது.

வரும் 21ம் தேதி நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்கு பதில் உரை அளிக்கப்படுகிறது.

வரும் 24ம் தேதி முதல் மானியக்கோரிக்கைகள் மீதான விவாதம் தொடங்கும் என்றும் பேரவை தலைவர் கூறியுள்ளார்.

************

ரிசர்வ் வங்கி:

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதில் இந்தியா முன்னிலை வகிப்பதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு.சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தொலைதூர கிராமங்களுக்கான மின் திட்டங்கள், தெருவிளக்கு திட்டம், சூரிய ஒளி சக்தி, உயிரி எரிபொருள் சார்ந்த திட்டங்கள், காற்றாலைகள், நுண் புனல் ஆலைகள், மரபு சாரா எரிசக்தி பிரிவுகள் போன்றவை இதில் அடங்கும் என்றார்.

************

ஹோலி

வண்ணங்களின் திருவிழாவாம் ஹோலி பண்டிகை நாடுமுழுவதும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் இன்று கொண்டாடப்படுகிறது.

வசந்தகாலத்தை வரவேற்கும் வகையிலும், நன்மைகள் தழைக்கவும், ஒற்றுமையும், சகோதரத்துவமும், அன்பு மேம்படும் அடையாளமாகவும் கொண்டாடப்படும் இவ்விழாவை ஒட்டி தலைவர்கள் மக்களுக்கு உளம் கனிந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கியுள்ளனர்.

இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் இவ்விழாவில் அனைத்து மக்களும் ஒருங்கிணைந்து தொடர் வளம், மகிழ்ச்சி, முன்னேற்றம் ஏற்படவும், அன்பு தழைக்கவும் உறுதி ஏற்க குடியரசு தலைவர், குடியரசு துணைத்தலைவர் பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங்,

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ்,

இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோரும் ஹோலி பண்டிகையை ஒட்டி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் சென்னை சௌக்கார்பேட்டை, கோவை, திருப்பூர், ஈரோடு, விழுப்புரம், திருச்சி உட்பட வட மாநிலத்தவர் வசிக்கும் பகுதிகளில் மக்கள் ஒருவருக்கொருவர் வண்ணங்களை பூசியும், சாயங்களை தெளித்தும் ஹோலி பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாடினார்கள்.

திருப்பூரில் வட மாநிலத்தோர் மகிழ்ச்சியுடன் இவ்விழாவை கொண்டாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

பல்வேறு வண்ண மலர்களிலிருந்தும், மறு சுழற்சி பொருட்களிலிருந்தும் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த வண்ண பொடிகளை கொண்டு டெல்லி, மேற்குவங்கம், குஜராத், உத்திரபிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில் ஹோலி பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

************

## கச்ச தீவு

கச்ச தீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா இன்று நடைபெறுகிறது.

இவ்விழாவில் பங்கேற்க சென்ற பக்தர்களை ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன் ஜீத் சிங் காலோன் இன்று ராமேஸ்வரத்திலிருந்து கொடியசைத்து வழியனுப்பிவைத்தார்.

இன்றுமாலை இவ்விழா தொடங்கி நாளை காலை தேர்பவனியுடன் நிறைவுபெறுகிறது.

இத்திருவிழாவில் பங்கேற்க சென்றவர்கள் எமது செய்தியாளரிடம் பேசுகையில்

இதனிடையே இந்திய கடலோர காவல்படையினரின் ரோந்து கப்பல்கள் கச்சதீவு செல்லும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கடலில் ரோந்து வருவதாக மண்டபத்தில் உள்ள இந்திய கடலோர காவல்நிலையத்தின் கமாண்டிங் அலுவலர் கமோடர் பி.வினய் குமார் தெரிவித்துள்ளார்.

************

## பேட்மிண்டன்

பர்மிங்ஹாமில் **All England Open badminton** சேம்பியன் பட்ட போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென் - சீனாவின் ஷீ ஃபெங் லீ-யை இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ட்ரீசா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை – சீன இணையுடன் இன்று மோதுகிறது.

************